(2) வினுக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினுக்கள்.

ஆரம்பாக்கம் மருத்துவமனை.

*394 வினு—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், ஆரம்பாக்கம் கிராமத்தில் உள்ள மருத்துவமனை சீராக நடைபெறவில்லை என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஆரம்பாக்கத்தில் உள்ள ஆயுர்வேத மருந்தகம் 1971-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை மருத்துவ அதிகாரி வேலைக்கு வராததாலும், பிறகு பயிற்சி பெற்ற ஆயுர்வேத மருத்துவ அதிகாரி கிடைக்காததாலும் சரிவர இயங்கவில்லை. அம்மருந்தகம் 29—5—1973 அன்று திறக்கப்பட்டு, திங்கள் வெள்ளி ஆகிய தினங்களில் கண்ணம்புகுளம் மருந்தகத்தில் உள்ள மருத்துவ அதிகாரியின் உதவியுடன் இயங்கி வந்தது. ஆயுர்வேத பயிற்சி பெற்ற "ஏ" வகுப்பு மருத்துவ அதிகாரி இம்மருந்தகத்தை 8—11—1973-லிருந்து கவனித்து வருகிறார்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த மருத்துவ அதிகாரி வேலைக்கு வராததற்கு என்ன காரணம் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இது ஊராட்சி ஒன்றியத்தால் நடத்தப்படுகிற மருந்தகமாகும். மேற்பார்வை இடுகிற அதிகாரம் மட்டும் அரசுக்கு இருக்கிறது. மருத்துவ அதிகாரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவர் சில குற்றங்களைப் புரிந்திருந்தார். அவரும் பதிவு செய்துகொள்ளப்பட்ட மருத்துவர்தான். அவர் ஒழுங்காக வேலைக்கு வரவில்லை. அவர் பின்னர் வேலையிலிருந்து விலக்கப்பட்டுவிட்டார்.

திருப்பத்தூர் மருத்துவ மனை.

* 395 வினு—திரு. ஜி. ராமசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், திருப்பத்தூரில் உள்ள அரசு மருத்துவ மனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?